**My No**:- NP/09/FRM/2007 **Date** :- 18.05.2007

**மாகாணத் திறைசேரி சுற்றுநிருபம் :- PT/14/2007**

செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,

வடமாகாணம்.

## <u>இடர் உதவிக் கடன் கொடுப்பனவு</u>

மாகாணத் திறைசேரியின் PT/02/2007 ம் இலக்கமும் 19.01.2007ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**2**. மேற்படி சுற்றுநிருபத்தின் பந்தி 3.1(b) யில் குறிப்பிட்டவாறு மேற்படி இடர்கடன் இதுவரை பெற்ற உத்தியோகத்தர்கள் மீண்டும் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அவரின் முன்னய இடர் உதவிக் கடனின் 2:3 பங்கு மீளளிக்கப்பட்டிருக்க வேண்டும். அதாவது இம் மீளளிப்பானது:-

ய) கடன் பெறும் நோக்கத்திற்காக <u>காசாக மீளச் செலுத்தியதாக இருக்க முடியாது</u>.

டி) மாதாமாதம் அறவிடப்படும் அறவீடுகளின் நிமிர்த்தம் மீள அறவிடப்பட்ட தொகை மொத்தக் கடனின் 2/3 ற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.

<u>உதாரணமாக</u>:-

முன்னைய கடனின் மீளச்செலுத்தும் தவணைகள் 30 எனில் 20 தவணைகள் செலுத்திய பின்பே மீண்டும் இக்கடனிற்கு விண்ணப்பிக்க முடியும்.

**3.** இக் கடன் விண்ணப்பித்த விண்ணப்பங்களின் முன்னுரிமை அடிப்படையிலும் பின்வரும் ஒழுங்கு முறையிலும் செலுத்தல் வேண்டும்.

1. சிற்றூழியர்கள்.
2. இடைநிலை உத்தியோகத்தர்கள்.
3. பதவிநிலை உத்தியோகத்தர்கள்.

**4.** மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்கும் போது பின்வரும் ஒழுங்குமுறையையும் கடைப்பிடித்தல் வேண்டும்.

1. முதல் தடவையாக கடன் பெறுபவர்கள்.
2. முன் பெற்ற கடனில் மீதி இல்லாதவர்கள்.
3. முன் பெற்ற கடனின் 2/3ற்கு மேல் செலுத்தி முடித்தவர்கள்.
   ( 2.b உதாரணத்தில் காட்டப்பட்டவாறு)

5. மாகாண சபைக்கு கடன் வழங்குவதற்கென வேறாக நிதி கிடைப்பதில்லை. எனவே வழங்கப்பட்ட கடனில் அறவிடப்படும் தவணைப் பணத்தில் இருந்தே கடன்கள், முற்பணங்கள் வழங்கவேண்டியுள்ளது. ஆகவே பின்வருமாறு முன்னுரிமை வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

1. விழா முற்பணம்
2. விசேட முற்பணம்
3. இடர் உதவிக் கடன்

6. எனவே இடர் உதவிக் கடன் வழங்குவதற்கென மாகாணத் திறைசேரியால் நிதி விடுவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் கண்டிப்பாக மேற்கூறப்பட்ட காரணிகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

சி.ரங்கராஜா
பிரதம செயலாளர்

பிரதி:-

1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வமா
2. செயலாளர், மாகாணப் பொதுநிர்வாகம் - வமா
3. கணக்காய்வாளர் நாயகம்
4. பிரதிப் பிரதம செயலாளர் - உள்ளகக் கணக்காய்வு – வமா

} தகவலுக்காக